

Vol.23 | No. 12 | December 2019

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## DIOCESAN DAY & SILVER JUBILEE INAUGURATION
## PADANTHALUMOODU, 10.11.2019









## PASTORAL COUNCIL
## SANGAMAM, 01.11.2019





# Happy Christmas







FIRST PROFESSION FCC
PILANKALAI, 02.11.2019





JUBILEE HOLY QURBANA
ANAYADI, 09.11.2019





CONSECRATION OF NEW CHURCH
KAZHUVANTHITTAI, 03.11.2019

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 23 No :12 DECEMBER 2019



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைவட்ட உருவாக்க ஆணை | 07 |
| மறைக்கல்வி | 08 |
| இளையோர் இயக்கம் | 09 |
| மிஷன் லீக் | 10 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 11 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 12 |
| இல்வாழ்வு இயக்கம் | 14 |
| சமூக சேவை சங்கம் | 15 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 18 |
| மறைவட்டச் செய்திகள் | 20 |
| Birthdays & Feastdays | 23 |
| செங்கோட்டை செய்திகள் | 25 |
| Bishop's Engagements | 27 |


*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**

Chief Editor
**Fr. Joseph Santhosh**

Executive Editor
**Mr. Soundara Raj**

Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Jesin**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**REF. NO. PRIESTS/GR/101/2019**

**30NOVEMBER 2019**

**DEAR AND REV. FATHERS,**

**GREETINGS FROM BISHOP'S HOUSE, THUCKALAY!**

We are entering the month of December, the last month of the year. It is a significant month for us Catholics as we celebrate the birth of Jesus Christ on 25 December. In preparation for this great solemnity, we have twenty-five days fast and the season is very meaningfully called Advent – waiting for the Saviour.I wishGod's blessings upon all our people as they begin to undertake this fast. I am sure you are already began to makebetter plans and preparationfor the celebration of Christmas in your respective parishes or institutions. As I mentioned to you during the priests' conference, which was held on 20 November 2019, kindly include in your planning, a celebration with the people of your neighbourhood. Kindly invite all the people who live in and around your parish or institution. Organise a brief programme with them explaining to them the significance of Christmas. If possible, I suggest that you give to each of them a small gift. After all Christmas is a celebration of sharing and whatever we share with others make our Christmas very meaningful.

To help us to reflect upon Christmas, let us consider a significant-line in the Gospel that challenges our love of God and of others. It also points to God's humble and abiding love for us. In the infancy narratives, St Luke very poignantly writes:"For there was no room for them in the inn" (Lk 2:7). Joseph, on behalf of Mary and Jesus (who is in her womb still), seeks entrance to the homes and lodgings of those in Bethlehem. Although the Jewish people in those days placed a high obligation upon the duty of hospitality to the

stranger and passer-by, the answer repeatedly given is, "No room here." Mary's obviously advanced pregnancy and the imminence of delivery seem to make little difference.

It was indeed a cold night,not so much in terms of the air temperature, but in terms of the hearts of the people. Surely someone could make room for a pregnant woman! But no; no room at the inn.The only warmth to be found is amongst the animals. An old Latin antiphon for Christmas says, "O great mystery and stunning sacrament, that animals would see the newborn Lord lying in a feed box." Here in the manger, warmth will be found, among the animals. It is sometimes said that man can be brutish, but the reality is that we can sink even beneath the beasts, doing things to ourselves and to one another that even animals do not. Scripture says: "The ox knows his master, the donkey his owner's manger, but Israel does not know me, my people do not understand … They have forsaken the Lord; they have spurned the Holy One of Israel and turned their backs on him" (Is 1:3-4). Again we read: "He was in the world, and though the world was made through him, the world did not recognize him. He came to that which was his own, but his own did not receive him" (Jn 1:10-11).The animals received him and gave warmth, yet his own people, knowing him not received him not. But in this midnight darkness and cold, the light and warmth of God's love will shine forth. "The people who walk in darkness have seen a great light; upon those who dwelt in the land of gloom a light has shone" (Is 9:1).

Surely God stoops low to come from lightsome heaven to our war-torn, dark, cold world. As he stoops, he stoops to the lowest place, being born not in a palace or even in a comfortable home. He stoops to a manger. God will defeat Satan's pride with humility. All who will find him during this Christmas must also stoop.This stooping of God is illustrated even in the very topography of the area.The towns of the Holy Land were built on the tops of the tall hills. Where land is relatively scarce, this is done so as to leave the fertile valleys for agriculture. Bethlehem was perched on higher

land and the shepherd's fields lay below. The streets of Bethlehem were steep and built on tiers or levels. Thus, the back lot of many homes and buildings dropped steeply down and beneath the buildings. Beneath the buildings the people hollowed out caves where animals and tools and tools were kept.

It was in such a place, down under, where Joseph and Mary sought hasty shelter, for it was a cold and dark midnight and Mary's time had come. God stooped with them to be born, among the animals and agricultural implements, in the damp cave under some house or inn.Those who want to find our God must stoop low. Even to this day, when one visits Bethlehem and wants to see the place of Jesus' birth, one must first enter the church through what is called the 'door of humility.' For security reasons, this door was built to be only about four feet high. One must stoop greatly to enter through it. Yes, we must stoop to find our God. The site of the birth is at the other end of the basilica, under the altar area. Here again, more stooping is required; down steep stairs, through another low and narrow door, and into the cave. To touch the spot, one must kneel and reach forward into a narrower part of the cave. 'Here Jesus Christ was born of the Virgin Mary,' says the inscription. The only way to get there is to stoop.

Yes, our God stoops; he stoops to the lowest place. To find him and be with him we, too, must be willing to stoop. God hates pride. He just cannot stand it because he sees what it does to us. He comes to break its back, not with clubs and swords or by overpowering, but with humility. Darkness cannot defeat darkness; only light can do that. Hate cannot defeat hate; only love can do that. Pride cannot defeat pride; only humility can do that. So God stoops.

At Christmas, God calls us with this same humility.He could have ridden down from heaven on a lightning bolt and stunned us into fearful submission. Instead he goes to the lowest place. He comes quietly, non-violently, without threat, as an infant. Even in this lowly way, though, He is still calling.So there is a knock at Christmas.

Scripture says:"Behold, I stand at the door and knock. If anyone hears my voice and opens the door, I will come in to him and eat with him, and he with me" (Rev 3:20). An old song says, "Somebody is knocking at your door! Oh Sinner, why don't you answer?"

When human history is complete and the last books are written, one of the saddest lines in all of that history will be this one: 'For there was no room for them in the inn.' How strange and sad for this world that God simply does not fit. He does not fit our agendas, our schedules, our priorities. No room; He just does not fit. Scripture says: "He came to that which was his own, but his own did not receive him" (Jn 1:11). "Yet to all who did receive him, to those who believe in his name, he gave the power to become children of God"(Jn 1:12).

What could be sadder than to miss this gift to become the very children of God? But there was no room for him in the inn.What of us? Is there room for Jesus in the "inn" of our hearts? If there is, Jesus comes bearing many gifts. There is a knock at the door during this Christmas. Jesus knocks at our door.

Every year Jesus comes knocking. He stoops low and invites us to find him in the lowly places of this world, in the lowly places of our own life. What are the things in your life that may be crowding out Jesus? What obstacles and preoccupations leave little or no room for him? What keeps you from recognizing Jesus and opening the door wide when he comes?If you've already openedthe door to him for many years, praise God and ask the Lord to help you open wider. Even though many of us have invited Jesus in, we have given him poor accommodations, perhaps relegating him to the couch or the floor.

Hence, the message of Christmas,dear Fathers, is this: make room for Jesus.Make more and more room for him in the inn of your soul. The Scripture assures us: "Yet to all who did receive him, to those who believe in his name, he gave the power to become

children of God" (Jn 1:12).Christmas night is a night of gifts and Jesus stoops low to give us a priceless gift: the power to become children of God. However, the question is: Is there room in the 'inn' of our hearts?

**CONCLUSION**

We are entering the last month of the year 2019. The year has been very momentous for the Eparchy in many ways. We have achieved much during this year. God has been blessing us with good vocations, sufficient resources and personnel from other Eparchies to continue our mission work in the extended territories of the Eparchy. Let us raise our minds and hearts to God in gratitude for all the blessings that we have received throughout this year. Let me take this occasion to wish everyone a Christ-filled Christmas and a prosperous New Year!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,
+ George Rajendran SDB

Bishop of Thuckalay

## மறைமாவட்டங்களுக்கு இடையேயான கூட்டம்

சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டத்தின் தலைமையில் 4 மறைமாவட்ட ஆயர்கள் மற்றும், இயக்குநர் தந்தையர்களின் கூட்டம் மும்மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது வழக்கம். இம்முறை இக்கூட்டம் சங்ஙனாச்சேரி ஆயர் இல்லத்தில் வைத்து 2019, நவம்பர் 26 அன்று நடைபெற்றது. விரிவாக்கப்பட்டப் பகுதிகளில் நடைபெறும் திருத்தொண்டுப்பணிகள் குறித்த விவாதம் நடத்தப்பட்டது.

# தக்கலை மறைமாவட்டம்
# மறைவட்ட உருவாக்க ஆணை

சீரோ மலபார் திருச்சபையின் தக்கலை மறைமாவட்டத்திற்கு தற்பொழுது ஆறு மறைவட்டங்களும் செங்கோட்டை மற்றும் விரிவாக்கப்பட்ட திருத்தொண்டு தளங்களும் உள்ளன. தக்கலை மறைமாவட்ட ஆயராகிய நான், மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB குருக்களின் கருத்துகளை கேட்டறிந்தபின் மறைமாவட்ட கூரியாவின் (உயர் மன்றம்) தீர்மானத்தின்படி நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் அதிகமாக உள்ள மறைவட்டமான மஞ்சாலுமூடு மறைவட்டத்தை மக்களின் ஆன்மீக மேய்ப்புப்பணியில் அதிக கவனம் செலுத்த இவ்வாணை மூலம் நவம்பர் 10, 2019 அன்று இரண்டு மறைவட்டங்களாக மாற்றி அமைக்கின்றேன்.

மஞ்சாலுமூடு மறைவட்டத்தோடு களியல் மறைவட்டத்தை இவ்வாணைப்படி உருவாக்குகின்றேன். இன்று முதல் களியல் பங்கு மறைவட்ட ஆலயமாக உயர்த்தப்படுகிறது.

மஞ்சாலுமூடு, பென்கிரி, குட்டைக்கோடு, மாலைக்கோடு, முக்கூட்டுக்கல், முழுக்கோடு, தெற்றிவிளை ஆகிய பங்குகளும் திருத்தொண்டு தளங்களும் மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலயத்திற்கு கீழ் செயல்படும்.

களியல், காரோடு, மாறப்பாடி, பள்ளிக்கோணம், மற்றும் தக்கலை-பிலாங்காலை மறைவட்டத்தின் குலசேகரம், சேனம்கோடு, திருவரம்பு, வலியாற்றுமுகம் ஆகிய பங்குகளும் திருத்தொண்டு தளங்களும் களியல் மறைவட்டத்திற்கு கீழ் செயல்படும்.

மஞ்சாலுமூடு மற்றும் களியல் பங்குத்தந்தையர்கள் இவ்வாணை மூலம் மறைவட்ட குருக்களாக நியமிக்கப்படுகின்றனர்.

இவ்வாணை வழியாக மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் அனைத்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் திருச்சபையின் இறைமக்கள் அனைவரும் இம்மறைவட்டங்களின் மேய்ப்புப்பணியின் கீழ் வருகின்றனர்

ஆகையால் தக்கலை மறைமாவட்ட ஆயரின் அதிகாரபூர்வமான இவ்வாணை வழியாக மஞ்சாலுமூடு மற்றும் களியல் மறைவட்டங்களின் எல்லையானது மேற்குறிப்பிட்ட பகுதிகளைக் கொண்டதாக மாற்றி அமைக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்படுகிறது.

இதற்கு எதிரான எவையும் நிலைகொள்ளா!

தக்கலை மறைமாவட்டம் இவ்வாணையை நவம்பர் 10, 2019 அன்று வழங்குகிறது.

**பேருட்தந்தை தாமஸ் சத்தியநேசன்**
**ஆவணக்காப்பாளர்**

**+ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**



# CATECHISM மறைக்கல்வி

"என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, உறுதியோடு இருங்கள்; நிலையாய் நில்லுங்கள்; ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக செய்யுங்கள்" ( 1 கொரிந்தியர் 15 : 58 )

**அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!**

**மறை மாவட்ட எழுத்துப் போட்டிகள்:-**

2019- 2020 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா எழுத்துப் போட்டிகள் மறை மாவட்ட அளவில் நவம்பர் 24 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை படந்தாலுமூடு மறை வட்ட ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் மற்றும் இரண்டாவது இடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர்.

2.30 மணி முதல் 3.30 மணி வரை Sub Juniors- Colouring,- Juniors, Seniors & Sup. Seniors ஓவியம் வரைதல் போட்டியும், 3.30 மணி முதல் 4.30 வரை Seniors கட்டுரைப் போட்டியும், Super Seniors கவிதை எழுதும் போட்டியும் நடைபெற்றது. அனைத்து மறை வட்டங்களிலுமாக 145 மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர்.

**அருட்தந்தை பிரின்ஸ் மாலியில்**
**இயக்குநர்**

# புனித மரியம் தெரேசியா புனிதராக உயர்த்தப்பட்டதற்கான நன்றித் திருப்பலி

திருக்குடும்ப துறவற சபையின் நிறுவனத்தலைவி 2019, அக்டோபர் 13 அன்று உரோமையில் வைத்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதராக உயர்த்தப்பட்டார். சீரோ மலபார் சபையைச் சேர்ந்த இப்புனிதரின் உயர் நிலைக்கு நன்றி நவிலும் விதமாக, 2019, நவம்பர் 23 அன்று படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் வைத்து, திருப்பண்ட வரவேற்பும் திருப்பலியும் நடைபெற்றது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையேற்று நடத்திய திருப்பலியில், மேதகு ஆயர்கள் வின்சென்ட் மார் பவுலோஸ், ரெமிஜியூஸ், நசரேன் சூசை ஆகியோரும் கலந்து கொண்டனர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

**அலகு சந்திப்பு**

மறைமாவட்ட பொறுப்பாளர்கள் 17-11-2019 அன்று வயலின்கரை அலகை சந்தித்தனர். இந்த சந்திப்புக் கூட்டத்தில் பங்கு இளையோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இளையோர்கள் சமுதாயத்திற்கு முன்னோடிகளாக திகழ வேண்டும் என்றும் மறைமாவட்ட மற்றும் மறைவட்ட அளவில் நடக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டுமென்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கேட்டுக்கொண்டனர்.

**Taize ஜெபம்**

23-11-2019 அன்று மாலை 6:30 மணி முதல் 7:30 மணி வரை வயலின்கரை அலகில் Taize ஜெபம் நடைபெற்றது. இந்த ஜெப வழிபாட்டில் அனைத்து இளையோர்களும் கலந்து கொண்டு பாவசங்கீர்த்தனம் எடுத்தனர். அலகின் இயக்குநர் அருட்தந்தை றோபின்ஸ் குழிக்கோடில் அவர்கள் தியான சிந்தனை வழங்கினார். மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**மஞ்சாலுமூடு மறைவட்ட கூட்டம்**

மஞ்சாலுமூடு மறைவட்ட கூட்டமானது களியல் பங்கில் வைத்து 24-11-2019 மாலை 3 மணி அளவில் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜெம்ஸ் கானாகாலில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மஞ்சாலுமூடு மறைவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலிருந்தும் ஏராளமான இளையோர்கள் கலந்து கொண்டனர். திருத்தொண்டர் றோபின் அவர்கள் இளையோர்கள் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி என சிறப்பு வகுப்பு எடுத்தார். பின்னர் மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் மறைமாவட்ட தலைவரும் பேசினார்கள். இளையோர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை மஞ்சாலுமூடு மறைவட்டம் தலைமையேற்று நடத்துகின்றது. இது குறித்தும் மறைவட்ட இளையோர்களின் முன்னேற்றத்தைக் குறித்தும் விவாதம் நடைபெற்றது.

**நன்றிகள்**

அலகுகள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்துதந்த மறைவட்ட இயக்குநர் தந்தையர்களுக்கும், மறைமாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்களுக்கும் அலகு பொறுப்பாளர்களுக்கும் தக்கலை இளையோர் இயக்கத்தின் சார்பாக நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஷிஜி,**
**செயலர்**

# சிறுமலர் MISSION LEAGUE



தக்கலை மறைமாவட்ட சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் 12 வது விசுவாச நடைபயணம் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்திலிருந்து புறப்பட்டு காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் நிறைவு பெற்றது. சுமார் 2 மணியளவில் குருகுல முதல்வர் பேருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் இறைவேண்டல்



செய்து கொடியசைத்து விசுவாச பேரணியை துவக்கி வைத்தார். இன்னிசை முழக்கத்தோடும் விசுவாச கோஷங்களுடனும் "ஆழத்தில் வலை போடுங்கள்" எனற மையச்சிந்தனையின் அடிப்படையில் கருத்து, வரைபடங்கள் மற்றும் இறைவார்த்தை அட்டைகளுடன் விசுவாச பேரணி தொடர்ந்தது. இடையிடையே நடுவர்கள் அமர்ந்து ஒவ்வொரு மறைமாவட்டங்களின் பங்கேற்பை பார்வையிட்டு தரங்களை நிர்ணயம் செய்தனர். சுமார் 4 மணியளவில் விசுவாசப் பேரணியானது காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தைச் சென்றடைந்தது. பின்னர் மிஷன் லீக் இயக்குநர் தந்தை அனைவரையும் வரவேற்று பேசினார். மேதகு ஆயர் துவக்க உரையாற்றி நிறைவு விழா நிகழ்ச்சியை துவங்கி வைத்தார். "ஆழத்தில் வலை போடுங்கள்" என்ற மையச்சிந்தனையின் அடிப்படையில் திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைக்கக் கேட்டுக்கொண்டார். மேலும் அவர், "தடைகள் வந்தாலும் விசுவாசத்தோடு நாம் பணியாற்றும் போது இறையழைத்தலை ஊக்கப்படுத்த முடியும். அதற்காக நாம் ஒவ்வொருவரும் உழைப்போம்" என்று கேட்டுக்கொண்டார். திரு ஞானதாஸ் அவர்கள் "மனிதர்களாக வாழ இவ்வியக்கம் வழிகாட்டுகிறது. இவ்வியக்கத்தின் விருதுவாக்குகளான, அன்பு, தியாகம், சேவை, பொறுமை ஆகியவற்றை வாழ்வில் கொள்ளும் போது ஏராளமான நன்மைகள் கிடைக்கும். மேலும் இது புனித வாழ்விற்கான விதைகளை நம்முள் விதைக்கும்" என்று தமது உரையில் கூறினார். நிகழ்வின் இடையே இனிய கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தேசிய

துணை இயக்குநர் அருட்சகோதரி ஆன்கிரேஸ், தமிழ்நாடு மண்டல தலைவர் அருட்தந்தை ஜோஸ் வயலில் முன்னாள் இயக்குநர் தந்தை திினோயி ஆகியோர் உடனிருந்து சிறப்பித்தனர். பின் திருமதி ஸ்னேகலதா ஆசிரியை அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். தொடர்ந்து பரிசு வழங்குதல் நிகழ்வு நடைபெற்றது. முதல் பரிசு ஆறுகாணி மறைவட்டமும் உ ம் பரிசு மஞ்சாலுமூடு மறைவட்டமும் ௩ ம் பரிசு தக்கலை–பிலாங்காலை மறைவட்டமும் பெற்றன. அவர்களுக்கான சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டன. மூன்று வருடம் தொடர்ந்து முதல் பரிசு பெற்ற ஆறுகாணி மறைவட்ட இயக்குநர் பேரருட்தந்தை றோபின் அவர்களுக்கு மிஷன் லீக் இயக்குநர் தந்தை அலக்ஸ் அவர்கள் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தார்கள். பின் மிஷன் கீதத்துடன் விழா இனிது நிறைவு பெற்றது. அனைவருக்கும் இனிய தேனீர் வழங்கப்பட்டது.

**நன்றிகள்**

நம்பிக்கை நடைபயணம் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைத்து மறைவட்ட இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், அருட்தந்தையர்கள், கன்னியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மிஷன் லீக் சிறுமலர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றி.

**வாழ்க! சிறுமலர் புகழ்! வளர்க !! சிறுமலர் மிஷன் லீக்இயக்கம் !!**

**அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட், இயக்குநர்**

## 2019, டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்

| | |
|---|---|
| 5 | இயக்குநர்களின் கூட்டம், ஆயர் இல்லம் |
| 14 | அருட்தந்தை தோமஸ் தெக்கேயில் அவர்களின் நினைவு தினம் |
| 14 | கிறிஸ்மஸ் விழா, செங்கோட்டை மிஷன் |
| 15 | கிறிஸ்மஸ் விழா, மதுரை மிஷன் |
| 16 | விரிவாக்கப்பட்ட மறைத்தொண்டுப் பணியாளர்களுடன் கிறிஸ்மஸ் விழா |
| 19 | அருட்தந்தையர்களின் கிறிஸ்மஸ் விழா |
| 21 | கிறிஸ்மஸ் விழா – துறவற சபைகள் |
| 21 | இளையோர்களின் கிறிஸ்மஸ் விழா |
| 28 | திருத்தொண்டர் ஷிஜோ அவர்களின் குருத்துவ அருட்பொழிவு |

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

" இறையாட்சியைச் சிறு பிள்ளையைப் போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார். என நான் உங்களுக்கு சொல்கிறேன். லூக் . 18:17

**பொறுப்பாளர்களின் கூட்டம்**

10-11-19 அன்று 2 மணியளவில் இயக்குநர் தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் அவர்கள் தலைமையில் கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து பொறுப்பாளர்களின் கூட்டம் நடைபெற்றது. மறைமாவட்ட ஜூபிலி வருடம் நடைபெறுவதால் குழந்தை ஈசோ இயக்கம் சார்பில் செயல்படுத்த வேண்டிய செயல்திட்டங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

- மறைமாவட்டத்திலுள்ள அனைத்து குழந்தைகளயும் ஒன்று சேர்த்து ஒருநாள் முழுவதும் அவர்களை உற்சாகத்துடன் கலை நிகழ்ச்சிகள் நடத்தி சிறப்பிக்கச் செய்ய வேண்டும்.
- குழந்தைகளுக்கு அதிக இறைவார்த்தைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.
- வீடுகளில் செபமாலை செய்ய பயிற்சி கொடுத்தல் வேண்டும். - பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

**பயிற்சிகள்**

6 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு புனிதர்களைப் பற்றிய வாழ்க்கை வரலாறு எழுதி படங்களும் சேகரித்து வட்டார பொறுப்பாளர்களிடம் ஒப்புவித்து அவர்கள் கல்லுவிளை குழந்தை ஈசோ இயக்க அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். Best Project-க்கு பரிசு வழங்கப்படும்.

ஆண்டுவிழாவிற்கு முன்னால் அனைத்து ஆலயங்களிலும் நடைபெற்று வரும் நிகழ்வுகளைக் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

**கலைவிழா**

குழந்தைகளை Infant, Child என்று இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1-1-2014-க்குப் பிறகு பிறந்த குழந்தைகள் Infant, எனவும் 1-1-2010 க்குப் பிறகு பிறந்த குழந்தைகள் Child என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. தனிப்போட்டிகள் Boys, Girls

தனித்தனியாக நடைபெறும்.

Infant – கதைசொல்லுதல் (1அரசர்கள் 18 ம் அதிகாரம்) Action Song

Child - Spech (புனித மரியம் திரேசியா) குழுநடனம் குழுப்போட்டிகளுக்கு குறைந்தது 3 நபர்களும் அதிகம் 7 நபர்களும் பங்கெடுக்கலாம்.

**குறிப்புகள்**

குழந்தைகளின் பிறப்பு சான்றிதழின் Xerox ஜனவரி 18 ம் தேதிக்கு முன் ஒப்படைக்க வேண்டும்.

Christmas cover காணிக்கையும் ஜனவரி 18 ம் தேதிக்கு முன் ஒப்படைக்க வேண்டும்

**அருட்தந்தை ஜோமோன்**

**மங்கலாமடத்தில், இயக்குநர்**

# ஆறாவது அருட்பணிப்பேரவை தொடக்கம்

2019–2022 ஆம் ஆண்டுகளுக்கான மறைமாவட்ட ஆறாவது அருட்பணிப் பேரவை 2019, நவம்பர் 1 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து தொடங்கப்பட்டது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த தொடக்க கூட்டத்தில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் முன்னிலை வகித்தார். புதுப்பேரவையின் இயக்குநராக பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்களும் செயலராக திரு ஜாண் (குமரித்தோழன்) அவர்களும் நியமிக்கப்பட்டார்கள். பொதுநிலையினர் ஒருவர் அருட்பணிப் பேரவையின் செயலராக பணியேற்றிருப்பது தக்கலை மறைமாவட்டத்தில் இதுவே முதன்முறை. அன்றைய நிகழ்வில், சிறப்பு விருந்தினராக சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்ட அருட்பணிப் பேரவையின் முன்னாள் செயலர் திரு. அனியன் குஞ்ஞு அவர்கள், அருட்பணிப் பேரவையின் இயல்பு மற்றும் பணி குறித்து விரிவாகப் பேசினார். பிற்பகலில் நடைபெற்ற கூட்டத்தில், மறைமாவட்ட வெள்ளிவிழாவின் செயல்திட்ட வரைவு அவைமுன், அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் அருட்தந்தை ஜோஷி குளத்திங்கல் ஆகியோரால் வைக்கப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் முன்னாள் அருட்பணிப் பேரவைச் செயலர் மிஜோ புத்தன்புரையில் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

**குடும்ப நல வாழ்வு மற்றும் மது அடிமைகள் மறுவாழ்வு மையம்**

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. இம்மையத்தில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய 3 நாட்களும் மது அடிமைகள் மற்றும் மனநோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்தலும் நடைபெற்று வருகின்றன. முதல் மற்றும் மூன்றாவது திங்கட்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு மனநல மருத்துவர் வருகை புரிவார். இந்நாளில் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம். இம்மையத்திலிருந்து 800 க்கும் மேற்பட்ட மது நோயாளிகளும் மன நோயாளிகளும் சிகிட்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

**திருமண பயிற்சி வகுப்பு**

திருமண பயிற்சி வகுப்பு இரு மாதத்திற்கு ஒரு முறை 3 நாட்கள் நடைபெறும். இம்முறை டிசம்பர் மாதம் 13, 14, 15 ஆகிய 3 நாட்களும் பயிற்சி நடைபெறும். பயிற்சி 13 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்து 15 ஞாயிற்றுக்கிழமை 2 மணிக்கு பெற்றோர்களுக்கான பயிற்சியுடன் நிறைவு பெறும். பயிற்சி கட்டணம் ரூபாய் 750 ஆகும். இடம் தக்கலை சங்கமம்.

**அருட்தந்தை அஜீஷ்**
**இயக்குநர்**

---

காரோடு புனித சூசையப்பர் தேவாலயத்தின் பொன் விழாவையொட்டி 24/11/2019 அன்று பொன்விழா நினைவரங்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழா அருட்தந்தை மேத்யூ குழிஞாலில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பங்குதந்தை அருட்தந்தை.அஜீஷ் அவர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்



# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

**பள்ளி மாணவமாணவிகளுக்கான ஓவியப்போட்டி**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் குழந்தைகள் தினத்தையொட்டி குழந்தைகளின் ஓவியத்திறமையை வெளிக்கொணர "வர்ணம் 2019" மாவட்ட அளவிலான ஓவியப் போட்டி மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டி நவம்பர் மாதம் 21- ம் தேதியன்று கல்லுவிளை ஆசிர் அரங்கத்தில் வைத்து நடத்தியது. தொடக்க விழாவினை KKSSS-ன் இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசோரில் அவர்கள் குத்துவிளக்கேற்றித்



துவங்கிவைத்தார். இதில் சிறப்பு விருந்தினராக தக்கலை காவல் ஆய்வாளர் திரு.எபனேசர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். IV முதல் VI வகுப்புவரை "குழந்தைகள் தினம்" என்ற தலைப்பில் ஓவியம் வரைதல் போட்டியும், VII முதல் X வரை "இயற்கையோடு இணைந்து" என்ற தலைப்பில் சுவரொட்டி வடிவமைத்தல் போட்டியும் நடைபெற்றது. இரு பிரிவுகளிலும் 38 பள்ளிகளை சேர்ந்த 641 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். மாணவர்களுக்கு "இயற்கையைக் காப்போம்" என்ற மையசிந்தனையில் களரி அமைப்பின் சார்பில் விழிப்புணர்வுக் கலைநிகழ்வு ஒருமணிநேரம் நடைபெற்றது. போட்டி நிறைவு



விழாவிற்கு சிறப்பு விருந்தினராக புலியூர்குறிச்சி தேவசகாயம பிள்ளை திருத்தல அதிபர் முனைவர் இராஜேந்திரன் அவர்கள் கலந்துகொண்டு குழந்தைகளைப் பாராட்டி பரிசுகளை வழங்கினார். முளகுமூடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஜஸ்டின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். ஓவியம் வரைதல்

போட்டியில் நாகர்கோவில் அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவரும சுவரொட்டி வடிவமைத்தல் போட்டியில் படந்தாலுமூடு திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவரும் முதல் இடத்தைப் பெற்றனர். இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சதி எலம்பசேரில், துணைஇயக்குநர் அருட்தந்தை எபின் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வை கன்னியாகுமாரி சமூக சேவை சங்கத்தினர் இணைந்து செயல்படுத்தினர்

**புற்றுநோய் பயிற்சிமுகாம்**:

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் "நலமும் நல்வாழ்வும்" திட்டத்தின் வழியாக புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் பத்துகாணி மற்றும் மாலைக்கோடு பகுதியில் நவம்பர் 14 மற்றும் 19 தேதிகளில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற ஒருங்கிணைப்பாளர் திரு.ராஜசேகர் அவர்கள் பேசும் போது உலகில் ஏற்படும் உயிரிழப்புகளில் ஒன்றுக்கு காரணம் புற்றுநோய் என்று கூறுகிறது. ஐந்துகாரணிகளான புகையிலை மற்றும் மது பழக்கம் அதிக உடல் எடை உழைப்பில்லாமை போன்றவை புற்றுநோய் வர காரணம். உலகில் ஆறு நொடிக்கு ஒரு நபரின் மரணத்திக்கு காரணமாக இருப்பது புகையிலையால் உண்டாகும் புற்றுநோய்களே. பல உறுப்புகளில் வந்தாலும் நுரையீரல், கல்லீரல், பெருங்குடல், வயிறு மற்றும் மார்பகம் ஆகிய உறுப்புகளிலேயே பெரும்பாலும் புற்றுநோய் உண்டாகிறது. மேற்கண்ட புற்றுநோய் உண்டாக்கும் காரணிகளை தவிர்ப்பதுடன் கதிர் வீச்சுகள், காற்றுமாசுபாடு, பாலுறவின் மூலம் பரவும் எச்.ஐ.வி–க்கு தொற்றுஉள்ளிட்டவற்றைத் தவிர்ப்பதன் மூலம் புற்றுநோய் வருவதைத் தடுக்கலாம் எச்.ஐ.வி எதிரான தடுப்பூசிகளை பயன்படுத்துவதன் மூலம் 10 இலட்சம் உயிர்களை காப்பாற்ற முடியும் என கூறினார்கள். இந்நிகழ்வில் களப்பணியாளர்கள் திருமதி. மேரி ஸ்டெல்லா மற்றும் திருமதி. அருளம்மா உட்பட 182 மக்கள் கலந்துகொண்டனர்

**பால் மற்றும் பால் பொருட்கள் பயிற்சி**:

கன்னியாகுமாரி சமூக சேவை சங்கம் மற்றும் பறக்கை தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சிமையம் சார்பில் பால் மற்றும் பால் பொருட்கள் என்ற பயிற்சி வகுப்பு நவம்பர் 26 அன்று லொரேட்டோ மாதா ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது . இதற்கு சீனாய் தியான இல்ல இயக்குநர் தந்தை மிஜோ அவர்கள் தலைமை வகித்தார். இதில் பேசிய

பறக்கை தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சிமையத்தின் மருத்துவர் முனைவர் செல்வகுமார் பால்




மற்றும் பால் பொருட்கள் ஊட்டச்சத்து மிகுந்த மற்றும் ஆரோக்கியமான உணவுகளாகும். இதில் இயற்கைச் சத்துகளான கால்சியம், பொட்டாசியம், லாக்டின், லாக்டோசு உள்ளிட்டவை அடங்கி உள்ளன. பாலின் வேதியல் மாற்றங்களின் மூலம் பாலில் இருந்து பல உப பொருட்களைப் பெறலாம். பாலை கொதிக்கச் செய்வதன் மூலம் கட்டிப்பட செய்து தயிரைப் பெறலாம். பின்னர் தயிரைக் கடைந்து கொழுப்புச் சத்து நிறைந்த வெண்ணெயையும், நீர்த்தன்மையான மோரையும் பெறலாம். வெண்ணெயை உருக்கி நறுமணமும் சுவையும் மிக்க நெய்யைப் பெறலாம். பாலை கொதிக்கச் செய்வதன் மூலம் பாலாடைக் கட்டியையும் பெறலாம். பாலை பாஸ்டுரைசேஷன் மூலம் 4 – 1 வாரம் வரை பாதுகாக்க முடியும் என்று கூறினார். இதில் களப்பணியாளர் திருமதி. குளோறி உட்பட 40 நபர்கள் கலந்துகொண்டனர்

**மருத்துவமுகாம்வயலின்கரை:**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் நெய்யூர் C.S.I மிஷன் மருத்துவமனை சார்பில் 08–11–2019 அன்று இலவச பொதுமருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்தமுகாமினை நித்திரவிளை ஜெயமாதா ஆலய பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் தொடங்கிவைத்தார். சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மார்த்தாண்டம் C.S.I மிஷன் மருத்துவமனை மருத்துவர்கள் Dr.சிஜி மற்றும் Dr.பியூட்லின் அவர்கள் ரத்த அழுத்தம் சர்க்கரை அளவு மற்றும் மகளிருக்கான நோய்கள் மற்றும் அனைத்து நோய்களுக்கும் இலவசமருந்து, ஆலோசனைகள், பரிசோதனைகள் வழங்கினார்கள் அதனோடு கண் நோயாளிகளுக்கு இலவச பரிசோதனைகளும் ஆலோசனையும் வழங்கினார்கள். இதில் நித்திரவிளை சுற்றுப்பகுதிகளிலிருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர். காலை 9 மணி முதல் 2 மணி வரை நடந்த முகாமில் 94 நபர்கள் கலந்துகொண்டனர்.

– அருட்தந்தைசஜி இளம்பாசேரில் sdb

# அருட்சகோதரர்களிடமிருந்து...




அனைத்து அருட்சகோதரர்களும் நலமாக உள்ளனர்.

குந்நோத்து நல்லாயன் குருமடத்தில் இறையியல் படித்துக்கொண்டிருந்த திருத்தொண்டர் ரோபின் தனது படிப்பை பூர்த்தி செய்து மறைமாவட்டத்திற்கு திரும்பினர். தனது திருத்தொண்டர் பணியை மஞ்சாலுமூடு குழந்தை தெரேசா ஆலயத்தில் ஆரம்பித்துள்ளார். மஞ்சாலுமூடு குழந்தை தெரேசா ஆலயத்தில் களப்பணி செய்து கொண்டிருந்த சகோ. டிவின் ராஜ் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். இரண்டு அருட்சகோதரர்களுக்கும் அனைத்து விதமான செபவாழ்த்துக்கள். சத்னா குருமடத்தில் படித்துக்கொண்டிருந்த திருத்தொண்டர் டோஜி தன்னுடைய இறையியல் படிப்பை பூர்த்தி செய்து மறைமாவட்டத்திற்கு திரும்பி தன்னுடைய திருத்தொண்டுப் பணியை ஆரம்பித்துள்ளார். திருத்தொண்டர் டோஜிக்கு அனைத்து விதமான செபவாழ்த்துக்கள். மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் திருத்தொண்டர் பணி செய்து கொண்டிருந்த திருத்தொண்டர் ஷிஜோ ஐக்கரக்குந்நேல் தனது பணியை இனிதே முடித்து குருப்பட்ட திருப்பொழிவிற்காக தனது சொந்த பங்கிற்கு சென்றுள்ளார். திருத்தொண்டர் ஷிஜோ அவர்களுக்கு அனைத்து விதமான செபவாழ்த்துக்கள். குருப்பட்ட திருப்பொழிவின் வெள்ளி விழா கொண்டாடும் அருட்தந்தை பீட்டர் கிழக்கேயில், அருட்தந்தை தோமஸ் மூலச்சாலில் என்போர் நவம்பர் 20 ம் தேதி வடவாதூர் தூய தோமையார் அப்போஸ்தலிக்க குருமடத்தில் வந்து நன்றி திருப்பலி நிறைவேற்றினர். அருட்தந்தையர்களுக்கு வெள்ளிவிழாவின் நல்வாழ்த்துக்கள்.

**இளங்குருமடம் - முக்கூட்டுக்கல்**

Music Night இளங்குருமடத்தில் 2019 நவம்பர் 21 ம் தேதி நடந்தது. மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்தார். குருமட அதிபர் தந்தைக்கும் அனைத்து சகோதரர்களுக்கும் அனைத்து வித வாழ்த்துக்களும். நவம்பர் 26–28 நாட்களில்

இளங்குருமட அதிபர் அருட்தந்தை குளத்திங்கல் உஜ்ஜயின் ஞகாலய குருமடத்தை பார்வையிட்டார். திருப்பலி நிறைவேற்றினார். அதிபர் தந்தைக்கு நன்றிகளை தெரிவிக்கிறோம். கவரப்பேட்டை, கோட்டயம், ஆலுவா, தலச்சேரி, திருச்சூர், பெங்களூர், உஜ்ஜயின் இந்த குருமடங்களில் படிக்கும் அனைத்து சகோதரர்களும் டிசம்பர் 18, 20 தேதிகளில் கிறிஸ்மஸ் விடுமுறைக்கு தங்கள் ஊர்களுக்குச் செல்கிறார்கள். அனைவரும் டிசம்பர் 23 அன்று மறைமாவட்டத்திற்கு வருவர். சகோதரர்களின் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் டிசம்பர் 23 அன்று மேதகு ஆயர் அவர்களோடு கொண்டாடப்படுகிறது. பின்னர் பல்வேறு பங்குகளுக்கு உதவிக்காக செல்வார்கள். அதைத் தொடர்ந்து Dn. ஷிஜோ அவர்களின் திருப்பட்ட திருப்பொழிவுக்கு பங்கேற்று, பின்னர் மறைமாவட்ட கலைப்போட்டிகளில் பங்கு பெறுவார்கள். பின்னர் வீடுகளுக்கு செல்வார்கள். ஜனவரி முதல் வாரத்தில் குருமடங்களுக்குத் திரும்புவார்கள். வரவிருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் தெரிவிக்கிறோம்.

**தலைவர்**
**அருட்சகோதரர். ஜோஸ்**
**புரயிடத்துகுந்நேல்**

# மறைமாவட்ட பொது தகவல்கள்

திருத்தொண்டர்கள் ரோபின் ஜோஸ் மற்றும் டோஜி ஆகியோர், தங்களது குருத்துவக்கல்லூரி பயிற்சிகளை முடித்து தற்போது மறைமாவட்டத்திற்கு திரும்பி உள்ளார்கள். இவர்கள் தற்போது தங்கள் திருத்தொண்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா நவம்பர் 29, 30 மற்றும் டிசம்பர் 1 தேதிகளில் சீனாய் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது.

பாளையங்கோட்டை மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர்.
பேரருட்தந்தை அந்தோணிசாமி சவரிமுத்து அவர்கள் பாளையங்கோட்டை இலத்தீன் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வறிவிப்பு 2019, நவம்பர் 20 அன்று வெளியானது. இவருடைய ஆயர் திருநிலைப்பாடு 2019, டிசம்பர் 15 மாலை 5 மணிக்கு பாளையங்கோட்டை தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வைத்து நடைபெறும்.

# மறைவட்ட செய்திகள்




## ஆசையப்பர் மறைவட்டம்

**கிள்ளியூர்**

17-11-19 அன்று பங்குப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 11-11-19 அன்று படந்தாலுமூடு வெள்ளிவிழாவில் கலந்துக் கொண்டு ஒரு நிகழ்விலும் பங்கெடுத்தனர். 24-11-19 மறைமாவட்ட ஜூபிலி ஆண்டின் தொடக்கவிழா செபமாலையுடன் பவனி வந்து திருப்பலி நடைபெற்றது.

**மாங்கரை - புனித வியாகப்பர் ஆலயம்**

3-11-19 அன்று பங்குப் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. 24-11-19 மறைமாவட்ட ஜூபிலி ஆண்டின் தொடக்கவிழா ஆடம்பரத் திருப்பலியுடன் மெழுகுவர்த்தி ஏந்தி தொடங்கி வைக்கப்பட்டது.

**பிலாங்கரை புனித லொரேட்டா ஆலயம்**

24-11-19 அன்று பங்குப் பேரவைக் கூட்டமும் மாதர் ஜோதிஸ் கூட்டமும் நடைபெற்றது. எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் சிறப்பு ஆராதனை நடைபெற்று வருகிறது.

**தக்காளிவிளை திருக்குடும் ஆலயம் - ஆயர் சந்திப்பு**

17-11-19 அன்று 7 மணிக்கு பங்குத்தந்தை சுபின் அவர்களும் இறைமக்களும் இணைந்து ஆயரை வரவேற்றனர். தொடர்ந்து ஆயர் அவர்களுடன் சிறப்பு திருப்பலியும் நடைபெற்றது.

**கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம் - ஆலய பாதுகாவலர் திருவிழா**

9-11-19 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு உறவியப் போட்டிகள் பங்குத்தந்தை ஜாண் பால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உறவியங்கள் சார்பில் தனிப்போட்டிகளாக விவிலிய வசனம் சொல்லுதல், மாறுவேடப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவைகளும் குழுப்போட்டியாக குறுநாடகம், குழுப்பாடல் ஆகியவைகளும் நடைபெற்றது. போட்டிகளை அருட்சகோதரி லின்ஸ் ஒருங்கிணைத்தார்கள்.

15-11-19 முதல் 24 ம் தேதி வரை பங்கின் பாதுகாவலர் திருவிழா

நடைபெற்றது. முதல் நாள் பங்குத்தந்தை ஜான் பால் அவர்கள் கொடியேற்றினார்கள். அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் தலைமையில் "உயிர்நீத்தோர் தினம்" கொண்டாடப்பட்டது. ஆலயத்துக்குள் கல்லறை வடிவம் ஒன்று அமைக்கப்பட்டு பங்கில் பணியாற்றி உயிர்நீத்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்கள் ஆகியோரின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டிருந்தது. இரண்டாம் நாள் தாமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் இராசாத்திருப்பலியும், மூன்றாம் நாள் 6 குழந்தைகளுக்கு முதல் திருவிருந்தும் உறுதிபூசுதலும் வழங்கப்பட்டது. ரீத்தாபுரம் பங்குத்தந்தை அம்புரோஸ் அவர்களின் மறையுரையும் நடைபெற்றது. அன்று மறைக்கல்வி இயக்க ஆண்டுவிழா நடைபெற்றது. மறைக்கல்வியின் இயக்குநர் தந்தை பிரின்ஸ் மாலியில் தலைமையிலும் ஊக்குவிப்பாளர் திரு. மரியதாஸ் முன்னிலையிலும் ஆண்டுவிழா நடைபெற்றது. 18 முதல் 21 வரை 4 நாட்கள் கும்பகோணம் கெத்சமனி தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மார்டின் ராஜா அவர்கள் தலைமையில் நற்செய்திப் பெருவிழாவும், சிறப்பு ஆராதனையும், ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது. எல்லா நாட்களிலும் செபமாலை. நவநாள். திருப்பலியும் நடைபெற்றது. 24 ம் தேதி காலை 9.15 மணிக்கு ஆயருக்கு வரவேற்பும், ஆயர் தலைமையில் திருப்பலியும் திருப்பலி வேளையில் ஆயர் அவர்கள் மறைமாவட்ட யூபிலி கொண்டாட்டத்தின் பங்களவில் நடைபெறும் கொண்டாட்டத்தை மெழுகுவர்த்தி எரிய வைத்து தொடங்கி வைத்தார். நிறைவில் கோயில் பணியாளர், ஆலய கைக்காரர்கள்,கடந்தாண்டு பள்ளி பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள், சீராக்கின் நூலில் இருந்து அதிக வசனங்கள் எழுதி போட்டியில் வெற்றி பெற்றவர்கள் ஆகியோருக்கு ஆயர் அவர்கள் நினைவுப் பரிசும் வழங்கினார்கள். அன்று மாலை சுமார் 6 மணிக்கு செபமாலையைத் தொடர்ந்து கொடியிறக்குதல் நிகழ்வும் நடைபெற்றது. நிறைவு நிகழ்வாக இளையோர் இயக்க ஆண்டுவிழாவும் நடைபெற்றது. படுக்கை நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குதல் நவநாள், செபமாலை, நற்செய்திக் கூட்டம், திருப்பலி, அன்பின் விருந்து என திருவிழா வெகு சிறப்பாக நடைபெற உதவிய பங்குத்தந்தை ஜான் பால், அருட்சகோதரிகள், கைக்காரர்கள், விழாக்குழுவினர்,பங்குமக்கள் அனைவருக்கும் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

## நித்திரவிளை மறைவட்டம்

**கிறிஸ்து அரசர் ஆலயம்- கிறிஸ்துராஜபுரம்**

பங்குப் பாதுகாவலர் திருவிழாவும் குடும்பவிழாவும் 18–11–19 முதல் 24–11–19 முடிய 7 நாட்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல்நாள் பங்குத்தந்தை லின்ஸ்லால் அவர்கள் திருக்கொடியேற்றி விழாவினை துவக்கி வைத்தார்கள். மாலை 6.15 மணிக்கு அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி செபித்தார்கள். முதல் மூன்று நாட்களும் நற்செய்திப் பெருவிழா அருட்தந்தை ஷின்றோ மூங்ஙத்தோட்டம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவிழா நாட்களில் செபமாலை, நவநாள், மற்றும் ஒப்புரவு வழிபாடும் நடைபெற்றது. ஒவ்வொரு உறவியமாக காணிக்கைப்பவனி மற்றும் திருப்பலியைச் சிறப்பித்தனர். இத்திருவிழா நாட்களில் ஏராளமான அருளும் ஆசீரும் கிறிஸ்து அரசர் வழியாக கிடைத்துள்ளது. தொடர்ந்து ஜீபிலி மெழுகுவர்த்தி ஏற்றி செபித்தார்கள்.

நித்திரவிளை மறைவட்டத்திற்குப்பட்ட அனைத்துப் பங்குகளிலும் 24–11–19 அன்று காலைத் திருப்பலியுடன் மறைமாவட்ட வெள்ளிவிழா ஜூபிலிக்கு ஆயத்தமாக அனைவரும் மெழுகுவர்த்தி ஏற்றி செபித்தார்கள்.



## படந்தாலுமூடு மறைவட்டம்

**புனித மார்டின் போரஸ் பங்கு**

**கழுவன்திட்டை**

ஆயர் மார் ஆன்றணிபடியற சங்ஙனாச்சேரி மறைமாநிலத்தில் ஆயராக இருந்த காலத்தில் அவரின் அனுமதிபெற்று 1981 ம் ஆண்டு அருட்தந்தை சிறியக்கூட்டுமேல் அவர்களால் கழுவன்திட்டையில் புனித மார்டின் டி போரஸ் பங்கு துவங்கப்பட்டது. அருட்தந்தை ஜிம்மி ஒலிக்கல் அவர்கள் பங்குத்தந்தையாக இருந்த காலத்தில் தக்கலை மறைமாவட்ட ஆயராக கர்தினால் மார் ஜார்ஜ்

ஆலஞ்சேரி அவர்கள் இருந்த போது 2007 செப்டம்பர் 15 ம் தேதி உயர் பேராயர் மார் ஜோசப் பெருந்தோட்டம் அவர்களால் கத்தீட்ரல் ஆலயத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. பிறகு மறைமாவட்டத்தின் அனுமதியின் படி பங்கு கோவில் கட்ட தீர்மானிக்கப்பட்டது. தற்போது நமது மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களின் தூண்டுதலால் தற்போதயை பங்குத்தந்தை ஷோஜோ அவர்களின் அரும் பெரும் முயற்சியாலும் பங்கு மக்களின் ஒத்துழைப்பாலும் பிற நல்லுள்ளங்களின் உதவியினாலும் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. 2019 நவம்பர் 3 ம் தேதி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் அர்ச்சிப்பட்டது. அன்றைய தினம் 19 குழந்தைகளுக்கு புதுநன்மையும் ஆயரால் வழங்கப்பட்டது. தொடர்ந்து திருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

---

## BIRTHDAYS OF REV FATHERS

**BIRTH DAYS - DECEMBER - 2019**

| | |
|---|---|
| Fr. Alex Puthettu | 17 |
| Fr. Joseph Anithottam CMI | 18 |
| Fr. Antony Jose | 18 |
| Fr. Matheus Robert | 26 |
| Fr. Rony Peedikakal MCBS | 26 |

## FEASTDAYS OF REV FATHERS

**FEAST DAYS - DECEMBER - 2019**

| | |
|---|---|
| Fr. Abilash Xavier Raj S. | 03 |
| Fr. Joshy Kulathumkal | 27 |
| Fr. John Thekkel | 27 |
| Fr. Subin Puthenpurackal | 27 |
| Fr. John Joseph | 27 |

# மறைமாவட்டச் செய்திகள்

## துறவற வாழ்வின் முதல் மற்றும் இறுதி வார்த்தைப்பாடு

தக்கலை மறைமாவட்டத்திற்கு உட்பட்ட துறவற சபைகளில் முதல் மற்றும் இறுதி வார்த்தைப்பாடு எடுத்துக்கொண்ட அருட்சகோதரிகளுக்கு மறைமாவட்ட அளவில் வாழ்த்துக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டம் ஆயர் இல்லத்தில்



வைத்து 2019, நவம்பர் 8 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில், இறுதி வார்த்தைப்பாடு ஏற்ற, அருட்சகோதரிகள் ஜின்சி மரியா SABS, ஜியோ மரியா SABS, ஜெர்மி CMC, டோனா மரியா CMC, ஆல்கபின் ஜான் CMC ஆகியோரும், முதல் வார்த்தைப்பாடு செய்து கொண்ட அருட்சகோதரிகள் அஞ்சு மரியா SABS, சொப்னா மரியா SABS, சோபியா ரோஸ் FCC, ஷைனி அல்போன்ஸ் FCC ஆகியோரும் கலந்து கொண்டு வாழ்த்துக்களை ஏற்றனர். மாலை 6.00 மணிக்குத் திருப்பலியுடன் தொடங்கிய நிகழ்வு இரவு 9.00 மணிக்கு இரவுணவுடன் நிறைவடைந்தது.

## பாலா மறைமாவட்ட ஆயர்களின் சந்திப்பு

பாலா மறைமாவட்ட ஆயர் மார் ஜோசப் கல்லறங்காட்டு, அம்மாவட்டத்தின் முன்னாள் ஆயர் மார் ஜோசப் பள்ளிக்காப்பறம்பில் மற்றும் குருகுல முதல்வர் ஆகியோர், தக்கலை மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட மறைபரப்பு திருத்தொண்டுத் தளங்களான சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் மதுரை பகுதிகளை 2019, நவம்பர் 12, 13 தேதிகளில் சந்தித்தனர். இவர்களோடு, பேரருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பறம்பில், அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலில், அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் மற்றும் திரு. சௌந்தர ராஜ் ஆகியோர் உடன் பயணித்தனர்

# செங்கோட்டைச் செய்திகள்

**அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் கூடுகை**

25-11-2019 அன்று புனித ஜோசப் பள்ளிக்கூடம் பன்மொழியில் வைத்து அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் கூடுகையானது நடைபெற்றது. மாலை 5.30 மணியளவில் ஆராதனையுடன் ஆரம்பமானது. கூடுகையில் பங்கெடுப்பதற்காக தக்கலையிலிருந்து குருகுல முதல்வர் பேரருட்தந்தை



தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். கூடுகையின் போது பக்த இயக்கங்கள், மற்றும் செயல்பாடுகளைக் குறித்து கலந்துரையாடப்பட்டது. அருட்தந்தை கிகி அவர்கள் செங்கோட்டை மறைத்தளத்தின் புதிய செயல்பாடுகளை எடுத்துக் கூறினார். இறுதியில் அருட்தந்தை றோணி MCBS அவர்கள் நன்றி கூறினார். நிறைவாக அன்பு விருந்துடன் கூடுகையானது இனிதே நிறைவுற்றது.

**செபமாலை திருப்பவனி**

3-11-19 அன்று மாலை 5.30 மணியளவில் செபமாலை திருப்பவனியானது பார்டரிலிருந்து வாஞ்சி ஆலயம் வரை நடத்தப்பட்டது. செங்கோட்டை மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை கிகி அவர்கள் ஆசீர் வழங்கி பவனியை துவங்கி வைத்தார். பவனியின் இறுதியில் அருட்தந்தை ராஜேஷ் MCBS அவர்கள் இறை உரை வழங்கினார். இந்த நடைப்பயண திருப்பவனியில் புளியரை, புதூர், வாஞ்சி, மேக்கரை ஆகிய ஆலயங்களிலிருந்து அருட்பணியாளர்கள் அருட்கன்னியர்கள் மற்றும் இறைமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு இறை ஆசீர் பெற்றுச் சென்றனர்.

**மாதாந்திர தியானம்.**

9-11-19 அன்று வாஞ்சி ஆலயத்தில் வைத்து ஒருநாள் தியானமானது நடைபெற்றது. காலை 10 மணியளவில் செபமாலையுடன் ஆரம்பமானது. அருட்தந்தை செபி அவர்கள் தியான உரை வழங்கினார். தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இத் தியானத்தில் ஏராளமானோர் பங்கு பெற்று இறை ஆசீர் பெற்றனர்.

# BISHOP'S ENGAGEMENTS DECEMBER 2019

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | sun | 09.00 am | Kalluvilai: Eparchial Bible Convention |
| 2 | Mon | 06.00 pm | Saveriyarpuram: Vespers |
| 3 | Tue | 07.00 am | Saveriyarpruam: Feast day Holy Qurbana |
| | | 10.00am | Thirunelveli: Mission visit |
| 4 | Wed | 10.00 am | Bishop's House |
| 5 | Thu | 02.00 pm | Bishop's House: Inter Departmental Meeting |
| 6 | Fri | 09.00 am | Bishop's House |
| 7 | Sat | 10.30 am | Chungankadai: UCC Pre-Christmas gathering |
| | | 02.00 pm | Kalluvilai: KKSSS Governing body and General body meeting |
| 8 | sun | 07.30 am | Mukkuttukal: Baptism Holy Qurbana |
| 9 | Mon | 11.00 am | Anayadi: Jubilee Holy Qurbana |
| 10-12 | Tue-Thu | | Bishop's House |
| 11 | Wed | 09.30 am | Bishop's House: Eparchial Meeting |
| 14 | Sat | 10.00 am | Bishop's House: Christmas Gathering with The Heads of Various Institutions |
| | | 05.00 pm | Shenkottai: Pre-Christmas Gathering |
| 15 | Sun | 08.00 am | Madurai: Holy Qurbana & Christmas Gathering |
| | | 05.oo pm | Palayamkottai: Episcopal ordination |

| | | | |
|---|---|---|---|
| 16 | Mon | 10.00 am | Madurai: Gathering with Missionaries in the extended territori |
| 17 | Tue | 07.00 pm | Sangamam: Guests from Rangblang, Shillong |
| 18 | Wed | 09.00 am | Bishop's House: Curia meeting |
| | | 12.00noon | Nagercoil: Meeting with Shanthidan NGO |
| 19 | Thu | 12.30 pm | Bishop's House: Christmas Gathering with Bishop's House Staff |
| | | 05.00 pm | Sangamam: Pre Christmas Gathering for Presbyterium |
| 20 | Fri | 11.00 am | Arumanai: Christmas and Marriage Felicitation meeting |
| | | 07.00 pm | Bishop's House: Pre-Christmas Gathering with Neighbors |
| 21 | Sat | 05.00 pm | Soosaipuram: Pre-Christmas Gathering with CRI-Thuckalay |
| | | 02.00 pm | Sangamam: Pre-Christmas Gathering with Well Wishers |
| | | 04.00 pm | Sangamam: Pre-Christmas Gathering with PRO |
| 22 | Sun | 07.30 am | Marthandam: Holy Qurbana |
| | | 12.00 pm | Bishop's House: Gathering with Officials |
| | | 06.00 pm | Mukkuttukal: Gathering with Minor Seminarians |
| 23 | Mon | 11.30 am | Erayumanthurai: Marriage Holy Qurbana at St. Lucia Church |
| | | 02.00 pm | Sangamam: Gathering with Major Seminarians |
| 24 | Tue | 10.00 pm | Maharajapuram: Christmas Holy Qurbana |

| | | | |
|---|---|---|---|
| 25 | Wed | 02.30 pm | >> Kannur |
| 26 | Thu | 03.30 pm | Kannur: First Holy Communion >> Kothamangalam |
| 27 | Fri | | Kothamangalam: Prayer day |
| 28 | Sat | 09.30 am | Thodupuzha: Priestly Ordination of Dn. Shijo Jose |
| 29 | Sun | 04.00 pm | Kumarakam: Marriage Holy Qurbana>> Thuckalay |
| 30-31 | Mon-Tue | | Bishop's House |

Fr. Sajan Nettaponghu, Bishop's Secretary

## மறைமாவட்ட தினம் மற்றும் ஜூபிலி தொடக்கவிழா

மறைமாவட்டத்தின் 23 ஆவது ஆண்டுவிழா கொண்டாட்டத்தின் போது ஈராண்டு கால மறைமாவட்ட யூபிலி கொண்டாட்டங்களின் தொடக்கவிழா, படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் நடத்தப்பட்டது. இவ்விழாவில் காஞ்ஞிரப்பள்ளி மறைமாவட்ட ஆயர் மார் மெத்யூ அறைக்கல் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். திருப்பலியை தலைமையேற்று நடத்திய அவர், மறைமாவட்ட ஜூபிலியை ஒளியேற்றி தொடங்கி வைத்தார். பின்னர், கைக்காரர்கள் மற்றும் பங்கின் பெண் பிரதிநிதி ஆகியோருக்கும், பங்கு மற்றும் துறவற இல்லங்களுக்கான மெழுகுதிரிகளும் செப அட்டைகளும் வழங்கப்பட்டன. பங்களவிலான மறைமாவட்ட யூபிலி தொடக்க விழா 2019, நவம்பர் 24, கிறிஸ்து அரசர் பெருவிழாவின் வேளையில் அனைத்து பங்குகளிலும் தொடங்கப்பட்டது.







FEAST HOLY MASS
PALAPALLAM, 24.11.2019





NEW SH CONVENT
PATHUKANI, 28.11.2019





HOLY QURBANA
THAKKALIVILAI, 17.11.2019







MISSION LEAGUE RALLY
KALLUVILAI, 17.11.2019





ST. MARIAM THERESIA,
THANKSGIVING MASS,
PADANTHALUMOODU, 23.11.2019



TCYM MANJALUMOODU FORANE GATHERING,
KALIYAL, 24.11.2019

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570